DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.19/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகவேல் | Caste: | |
| Father's Name: | தனிக்கொடி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.04.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

நான் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா கீழாயூர் காலனியில் குடியிருந்து வருகிறேன். சிவகங்கை மாவட்டம் சாலைகிராமம் காவல்நிலையத்தில் Grade I காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் சாட்சி சொன்ன தாமரைச்செல்வி எனக்கு மருமகள் உறவு. சாட்சிகள் கரண், முனீஸ்வரி, கோட்டைச்சாமி, போஸ் ஆகியோரைத் தெரியும். நான் இந்து பட்டியல் இனத்தைச் சேர்ந்த புதிரை வண்ணான் சாதியைச் சார்ந்தவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் இந்து மறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள். கடந்த 29.01.2024ம் தேதி காலையில் 10.45 மணியளவில் எனது மருமகள்தாமரைச் செல்விக்கு மூன்று வருடத்திற்கு முன்பு அருப்புகோட்டை ஜெயந்தி மருத்துவமனையில் குடலிறக்கத்திற்கான அறுவை சிகிச்சை செய்திருந்ததால் வலி இருப்பதாக கூறியதால் மேற்படி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். கமுதியில் இருந்து என் இரு சக்கர வாகனத்தில்

அருப்புக்கோட்டைக்கு அழைத்து சென்றேன். பதிவு எண். TN 65 Y 6904 சிவப்பு கலர் Royal Enfield வாகனமாகும். கமுதியைத் தாண்டி குண்டாறு பாலம் அருகே சென்றுகொண்டிருக்கும்போது கோட்டை மேடு பகுதியில் இருந்து வந்த பள்ளபச்சேரியைச் சேர்ந்த முனீஸ்வரி, கரண் இருசக்கர வாகனத்தில் வந்து எங்களைப் பார்த்து எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டனர்,. நாங்கள் அருப்புக்கோட்டைக்கு செல்வதாக கூறினோம். அவர்கள் கீழராமநதிக்கு ஆடுவாங்க செல்வதாக கூறினர். நாங்கள் நால்வரும் சேர்ந்து கமுதி அரசு மருத்துவமனை செல்லும்பாதையில் டீ சாப்பிட்டுவிட்டு நாங்கள் இருவரும் அவரவர் இருசக்கர வாகன்ங்களில் கிளம்பிவிட்டோம். அருப்புக்கோட்டை செல்லும் வழியில் உள்ள இடைச்சியூரணி விலக்கு ரோடு தாண்டி வெள்ளைச்சாமி உடைமரம் கோவிலுக்கு எதிரே இடதுபக்கம் உள்ள கருவக்காட்டிற்கு அருகே செல்லும்போது தாமரைச் செல்வி சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கேட்டதால் வாகனத்தை நிறுத்தினேன். தாமரைச் செல்வி இறங்கி கருவக்காட்டிற்குள் சென்றுவிட்டார். சென்ற சிறிது நேரத்திற்குள் அவர் கத்தும் சத்தம் கேட்டது. நான் உடனே கருவக்காட்டிற்குள் சென்று பார்த்தேன். கருப்பு கலர் சட்டை அணிந்த கையில் கத்தியுடன் உள்ள ஒரு நபரை பார்த்தேன். வெள்ளை கலர் பூ போட்ட சட்டை மற்றும் கருப்பு சட்டை அணிந்த மற்றொரு நபரையும் ஆக மூவரை பாரத்தேன். அதில் வெள்ளை மற்றும் கருப்பு சட்டை அணிந்து கத்தியுடன் இருந்த நபரை பார்த்து, அவனை பிடிடா அஜித் என்று கூறினார். கத்தி வைத்துக்கொண்டு கருப்பு சட்டை அணிந்திருந்த நபர் தற்போது நீதிமன்றத்தில் வெள்ளை சட்டை அணிந்து ஆஜராகி இருப்பதாகவும், அவர் பெயர் அஜித் என்றும், வெள்ளை பூ போட்ட சட்டை அணிந்திருந்து தற்போது வெள்ளை

கலருடன் டிசைன் போட்ட சட்டை அணிந்திருப்பவர் பாலமுருகன் என்றும், சம்பவத்தின் போது கருப்பு சட்டை அணிந்திருந்த நபர், தற்போதும் நீதிமன்றத்தில் கருப்பு சட்டை அணிந்திருப்பவர் சூர்யா என்றும் சாட்சி அடையாளம் காட்டுகிறார். என் கழுத்தில் கத்தி வைத்து அஜித் பிடித்துக்கொண்டார். நீங்கள் யார் உங்களுக்கு இங்கே என்ன வேலை என்று கேட்ட என் கன்னத்தில் ஓங்கி அறைந்து என் சட்டைப் பையில் வைத்திருந்த ரூபாய் 3000/− வலுக்கட்டாயமாக பறித்து கொண்டார். நீங்கள் எந்த ஊர் எதற்கு வந்திருக்கீறிர்கள் என்று மிரட்டினர். நாங்கள் நெறிஞ்சிப்பட்டி என் அக்கா மகள் வயிற்று வலிக்காக அருப்புக்கோட்டை ஜெயந்தி மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறினேன். அருப்புகோட்டை செல்பவர்களுக்கு இங்கே என்னடா சுன்னி வேலை என்று அஜித் கூறினார். நீங்கள் என்ன ஆட்கள் என்று அஜித் முதலிலும் பின் மற்ற இருவரும் என்னிடம் கேட்டனர். நான் முதலில் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறினேன். அதில் நீங்கள் என்ன ஆட்கள் என்று கேட்டனர். நான் இந்து புதிரை வண்ணான் என்று கூறினேன். உங்களை எல்லாம் ஏதாவது செய்தால் யார் கேட்பார் என்று கூறினர். புதிரை வண்ணான்தானா என்று சொல்லிவிட்டு வெள்ளை கலர் பூ போட்ட சட்டை அணிந்தவனும் , கருப்பு கலர் சட்டை அணிந்த மற்றொருவரும் என் கழுத்தில் கத்தி வைத்து வேறு இடத்திற்கு அழைத்து சென்றுவிட்டனர். சிறிது நேரம் கழித்து நான் இருக்கும் இடத்திற்கு அஜித் வந்த பின்பு வெள்ளை கலர் பூ போட்ட சட்டை அணிந்தவர் தாமரைச் செல்வி இருந்த இடத்திற்கு சென்றார். சிறிது நேரம் கழித்து அந்த நபரும் திரும்பி வந்துவிட்டார். அதன்பிறகு நான் இருக்கும் இடத்திற்கு தாமரைச் செல்வியை மூவரும் அழைத்து வந்தனர். வெள்ளை கலர் பூ போட்டவரும்,

கருப்பு சட்டை போட்டவரும் அஜித்தை பார்த்து அவர்களை வீடியோ எடு என்று கூறினர். அவ்வாறு அஜித் சொல்லிவிட்டு நீங்கள் இருவரும் ஒன்றாக வண்டிக்கு அருகே நில்லுங்கள் நாங்கள் சொல்வதுபோல் நீங்கள் இருவரும் தவறான பழக்கத்தில்தான் வந்தோம் என்று சொல்லாவிட்டால் வீடியோ புகைப்படம் எடுத்து இணையதளத்தில் போட்டுவிடுவோம் என்று மிரட்டினர். இந்த விவரத்தை வெளியில் சொல்லி புகார் எதுவும் கொடுத்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு வீடியோ எடுத்தபின் நாங்கள் கேட்கும்போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் எங்களை மிரட்டினர். அவர்கள் வைத்திருந்த TN 61 V 9369 கருப்பு நிற R15 என்ற வண்டியில் மூவரும் ஏறி சென்றுவிட்டனர். தாமரைச் செல்வி அழுததால் அவரிடம் என்ன நடந்தது என்று விசாரித்தேன். நான் சிறுநீர் கழிக்க கருவக்காட்டுக்குள் சென்றபோது தான் வந்த சத்தம் கேட்டு மூவர் வந்து கத்தியைக் காட்டி என்னை சுற்றி வழிமறித்து நின்றுவிட்டனர். உங்களை பாலமுருகன், சூர்யா கூட்டி சென்றபின் அஜித் என் கழுத்தில் கத்தியை வைத்து சட்டைக்குள் கைவிட்டு உள்ளே வைத்திருந்த மஞ்சள் கலர் மணிபர்ஸ் இருந்த 550 ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு அந்த பர்ஸை கீழே தூக்கி போட்டுவிட்டதாகவும், நான் என் மாமாவும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று எவ்வளவோ கெஞ்சியும் , நீ புதிரை வண்ணாத் தேவுடியாதானே, நான் சொல்வதை இருவரும் கேட்க வேண்டும் என்று வலுக்கட்டாயமாக படு என்று சொல்லியும் அதை தாமரை செல்வி கேட்காததால் கீழே தள்ளி கற்பழித்துவிட்டதாக கூறினார்., அஜித் வந்தபின் வெள்ளை கலர் பூ போட்ட சட்டை போட்டவர் வந்து நீ புதிரை வண்ணான்தானே நான் சொல்வதுபோல் இரு என்று சொல்லி அவனும்

வலுக்கட்டாயமாக கீழே தள்ளி தாமரைச் செல்வியை கற்பழித்துவிட்டார். அதன்பிறகுதான் நான் இருந்த இடத்திற்கு அழைத்து வந்ததாக கூறினார். நாங்கள் இருவரும் அழுதுகொண்டே மெயின் ரோட்டிற்கு வந்துவிட்டோம். எங்களுக்கு தெரிந்த நபரான கரண் மற்றும் முனீஸ்வரி கீழ ராமநதிக்கு சென்றுவிட்டு சுமார் 1 மணி நேரம் கழித்து திரும்பி வந்தனர். தாமரைச் செல்வியிடம் ஏன் அழுகிறாய் என்று கேட்டனர். நடந்த விவரத்தை அவர்களிடம் தாமரைச் செல்வி கூறினார். தாமரைச் செல்வியும் மருத்துவமனைக்கு செல்லவேண்டாம் வீட்டிற்கு செல்லலாம் என்று கூறிவிட்டார். நாங்கள் ஆடு வாங்க செல்லும்போது எதிரிகள் சாலை ஓரமாக இருந்தனர் என்றும், முயல் பிடிப்பவர்கள் என்றும் நாங்கள் பார்த்துவிட்டு சென்றதாக கூறினோம். நாங்கள் திரும்பி வரும்போது கிலாமரம் நோக்கி சென்றதை பார்த்தாகவும் கூறினர். நாங்கள் இருவரும் பதற்றத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அஜித் என்ற ஒரு பெயர் மட்டும் தெரிந்ததால் மற்ற இருவரையும் அடையாளம் தெரிந்ததால், அஜித் பற்றி விசாரிக்கும்போது அவருக்கு ஏற்கனவே குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது தெரியவந்தது. நமக்கு நடந்ததுபோல் இனி யாருக்கும் நடக்கக்கூடாது என எண்ணி கமுதி கால்வநிலையத்தில் 31.01.2024 அன்று மாலை 6.00 மணியளவில் சென்று தாமரைச் செல்வி புகார் கொடுத்தார். நான் உடன் சென்றேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்திதான் அஜித் எங்களை மிரட்டிய கத்திதான் என்று அடையாளம் காட்டுகிறார். அந்த கத்தி (சா.பொ.3). பிறகு 03.02.2024 அன்று குற்றவாளியை பிடித்துவிட்டதாக தகவல் தெரிந்து கமுதி காவல்நிலையத்தில் சென்று அடையாளம் காட்டினோம். அம்மன்பட்டியைச் சேர்ந்த அஜித் என்ற

விக்னேஷ்வரன், மரக்குலத்தைச் சேர்ந்த பாலமுருகன், பசும்பொன்னைச் சேர்ந்த சூர்யா ஆகிய மூவரையும் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினோம். பின் 13.02.2024 ம் தேதி கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் பயத்தில் பதற்றத்தில் இருந்ததால் நடந்த சம்பவங்களை தெளிவாக சொல்ல எங்களால் இயலவில்லை. பின் மறுவாக்குமூலத்தில் நடந்த விவரத்தை தெளிவாக கூறியுள்ளேன். இதுசம்பந்தமாக காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/- N. Shanthi
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)